அசல்

27. 2. 1942. தி. சதாசிவ ஐயர்.

அசல் — 1 நகல் — இல்லை.

தொன்மை மறவேல்

யாழ்ப்பாணம் *Jaffna*

27 – 2 – 1942.

# யாழ்ப்பாணம்
# ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.

The Jaffna
Oriental Studies Society.

Established 1921.

PATRON
H. E. THE GOVERNOR.

PRESIDENT
THE DIRECTOR OF EDUCATION

VICE-PRESIDENTS
S. NATESAN, B A. B. L.
F. R. E. S., M. S. C.
The Rev. Father,
S. GNANAPRAGASAR, O M. I.
MUDALIAR S. CANDIAH.
Retired Supervisor of Vern. Education.

SECRETARY
The District Inspector of Schools (Tamil)
(MR. J. T. SADASIVA IYER.)
Jaffna, Ceylon.

*Subject :* கலாநிதி.

மகாகனம் பொருந்திய தமிழ்த்தெய்வ சொரூபராகிய அன்பு நிறைந்த ஐயா அவர்களது திருவடிகட்கு அநேக நமஸ்காரஞ் செய்து விநயத்துடன் எழுதும் விஞ்ஞாபனமாவது :— சில காலமாகத் தங்களுக்குக் கடிதம் எழுதாதிருந்தமையைப் பொறுத்தருளும்படி வேண்டுகின்றேன் - தாங்கள் உடல்நலம் குன்றாது ஆரோக்கிய காத்திரராயிருக்க வேண இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் கலாநிதி என்னும் பெயரோடு ஒரு திரைமாத வெளியீடு வெளியிடத் தீர்மானஞ் செய்து வேண்டிய முயற்சி செய்து வருகிறேன் - ஏப்ரல் மாத முதலில் முதல் இலக்கப் பத்திரிகை வெளியாகும். அதற்கு ஒரு வாழ்த்து (நலந்திச்செய்யுள்) தமிழ்த்தெய்வமாகிய தங்கள்பால் பெறப் பெரிதும் விழைகின்றேன் - கருணை செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

நமஸ்காரம், அன்பன், திசதாசிவஐயர்.

அசல்

27.2.1942. தி. சதாசிவ ஐயர்.

அசல் – 1 நகல் – இல்லை.

'ஈழகேசரி' மறுபிரசுரம் 1-2-42

## யா. ஆ. தி. பா. சங்கத்து

# 19-வது வருடாந்த ஆவேதனம்

இந்த ஆவேதனம் 1940 ஆடி முதல் 1941 மார்கழி முடியவுள்ள 18 மாத காலத்துக்கு உரியதாகும். இக்கால ஆரம்பத்தில் 93 அங்கத்தினர் இருந்தனர். இடையில் நால்வர் காலமாயினர். இப்போதிருப்பவர் 89 தின்மராவர். புதிதாக 31 பேர் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். நீண்டகாலம் அங்கத்தவராகவும் உப-காரியதரிசியாகவுமிருந்து உற்ற துணைபுரிந்து இச்சங்கத்தை வளர்த்தவரும், புலவர்குடிப் பிறப்பும் சிறந்த மதிநுட்பமும் விரிந்த நூலறிவும் பெரும் புலமையும் விசித்திர வாக்குவன்மையும் ஒருங்கு வாய்க்கப்பெற்று விளங்கின அறிஞருமாகிய பண்டிதர் வே. மகாலிங்கசிவம் அவர்களை இழந்து துன்புறும் நிர்ப்பாக்கியத்தை இச்சங்கம் இக்காலத்திற் பெறலாயிற்று. அவர்களது பிரிவு பொதுவாகத் தமிழுலகிற்கும் சிறப்பாக இச்சங்கத்திற்கும் நேர்ந்த ஒரு பெரிய நஷ்டமாகும். அவர்களது அரிய பெரிய கலைத்தொண்டினைப் பாராட்டி அன்புக் கொடையாக இச்சங்கம் பண்டிதரவர்களது ஞாபகசின்ன நிதிக்கு 25 ரூபா அளிக்கலாயிற்று.

இக்காலத்தில் சங்கத்து நிருவாகசபை ஏழுதரம் கூடிற்று சபையங்கத்தினர் கூட்டங்களுக்குத் தவறாது வந்து கூட்ட விஷயங்களை நடத்துவதிற் காட்டிய ஆர்வம் பாராட்டற்குரியதென்பது.

இச்சங்கப் பரீட்சைகளுக்குத் தோற்ற விரும்பிப் பாட ஆயத்தஞ் செய்யும் வித்தியார்த்திகளுக்கு உதவிசெய்தற்பொருட்டு, பண்டித பாலபண்டித வகுப்புக்கள் 1940 ஆடி முதல் 1941 மாசி வரையும் வாராந்தங்களில் வைத்து நடத்தப்பட்டன. வித்துவான் ந. சுப்பையாபிள்ளையவர்கள் போதகாசிரியராயிருந்து இவ் வகுப்புக்களை நடத்தினர். எண்மர் பண்டித மாணவரும் 13 பாலபண்டித மாணவரும் கற்றனர்.

1941-ம் ஆண்டுப் பரீட்சைகளுக்கு 147 பேர் தோற்றினர், தமிழுக்கு 145 பேரும், சம்ஸ்கிருதத்திற்கு 2 பேருமாக: தமிழ்ப் பண்டித பரீட்சைக்கு நால்வர் தோற்றினர். ஒருவர் நூனசித்தி பெற்றனர். ஏனையர் தவறினர். தமிழ்ப் பாலபண்டித பரீட்சைக்கு 84 பேர் தோற்றியவருள் 26 பேர் சித்திபெற்றனர். தமிழ்ப் பிரவேச பரீட்சைக்கு 57 பேர் தோற்றியவருள் 21 பேர் சித்தியெய்தினர். சம்ஸ்கிருத பாலபண்டித பரீட்சைக்குத் தோற்றிய இருவரும் முதற் பிரிவிற் சித்தியெய்தினர். இவ்வருடப் பரீட்சைகளிற் சித்தியெய்தியவருள் ஒருவரும் போதிய அளவு உயர்தரம் பெறுமையினால் பரிசில் ஒன்றும் எவருக்கும் வழங்கப்படவில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துச் சரித்திரநூற் பேராசிரியர் ஸ்ரீ. ச. கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்த காலத்தில் அவரைக்கண்டு இச்சங்கத்தின்சார்பில் "தமிழ்க்கலை வளர்ச்சி" என்னும் பொருள்பற்றிய ஓர் உபந்நியாசம் 24-4-41 இல் நிகழ்த்துவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக் "கலாநிலையம்" என்னும் ஸ்தாபனத்தின் காரணகர்த்தரும் யாழ்-மத்திய கல்லூரியில் ஓவியக்கலை ஆசிரியருமாகிய ஸ்ரீ K. நவரெத்தினமவர்கள் மிகுந்த ஆராய்ச்சியும் உழைப்புங் கொண்டு இயற்றிய "தென் இந்திய சிற்பவடிவங்கள்" என்னும் அரிய பெரியநூலை வெளியிடுவதில் அவர்க்கு உதவியாக, அஃது ஒரு கலையாக்க வேலையும் அரிய முயற்சியுமாயிருத்தலை நோக்கி, இருபது பிரதிகளின் விலையாகிய இருநூறு ரூபாவை முற்பணமாகக் கொடுத்து ஊக்கப்படுத்தலாயிற்று.

தமிழ்ப்பாடசாலைகளிற் கீழ்வகுப்புகளிற் கற்கும் இளம் மாணவர் பாடிப் படித்து ஆடி மகிழ்ந்து பயன்பெறும்படியாக அவர் தரத்துக்கேற்ற இயல்பினவாய இலக்கியப் பாடல்களை ஆக்குவித்தற்கும் அங்ஙனம் பாடல்களை ஆக்குவோர்க்கு ரூ 60/-, ரூ 40/-, ரூ 30/-, ரூ 20/-, என்னும் அளவினவாக நாலு பரிசில்கள் வழங்குவதற்கும், இச்சங்கம் ஒழுங்குசெய்திருக்கின்றது.

இச்சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகிய சாதனங்களுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டது சங்கச்சார்பில் ஒரு பத்திரிகை (சஞ்சிகை வடிவமாக) நடத்துதலென்பது. இதுகாறும் தொடங்கப்படாதிருந்த இந்த முயற்சியை இப்போது செய்யத்தொடங்கி 1942 முதலாக "கலாநிதி" என்னும் பெயரிய மும்மாத வெளியீடு ஒன்று 72–80 பக்கங் கொண்டதாகவும், வருட சந்தா 2 ரூ. உடையதாகவும், வெளியிட ஒழுங்குகள் செய்யப்படுதலாயிற்று.

சங்கத்தின் நிலைமையைத் திருத்தி முன்னேற்றமும் உறுதியுமான முறையில் அமைத்தற்பொருட்டுச் சில பிரமாணங்கள் பின்வருமாறு திருத்தியுங் கூட்டியும் ஆக்கப்பட்டன. அவையாவன:— சங்கப்பரீட்சைகளைச் சித்திரை மாதத்தில் நடத்தி வருதல்; சங்கத்து வரவுசெலவுக் கணக்கு மூன்றுமாதத்துக் கொருமுறை முடித்து நிருவாகசபைக்குச் சமர்ப்பித்தல்; நிருவாக சபையின் அனுமதியைப் பெற்ற செலவு வகைகளுக்கே தனாதிகாரி பணம் அளிக்கவேண்டியது; முன்னதாக அவ்வனுமதியைப் பெறாமல் எந்தச் செலவுக்காவது தனாதிகாரி சங்கப்பணத்தைச் செலவுசெய்தலாகாது; அங்கத்தவரிடமிருந்து 1941 முடியவுள்ளகாலத்துக்கு வருமதியாகவுள்ள சந்தாப்பணப் பாக்கிகளையெல்லாம் நீக்கிவிட்டு 1942 முதல் கண்டிப்பாக எல்லாரிடமிருந்தும் சந்தாப் பணத்தை அறவு செய்தலென்பது; அந்தந்த ஆண்டுச் சந்தாவைப் பிரமாணப்படி அதாவது முதல் இரண்டு மாதத்துள் செலுத்தி, சந்தாப்பாக்கி இல்லாதிருக்கும் எல்லா அங்கத்தவர்க்கும் சங்கத்தால் வெளியிடப்படும் எல்லா வெளியீடுகளும் (புத்தகங்களுட்பட) இலவசமாக அளிக்கப்படுதல் வேண்டும் என்பனவாம்.

கலைவளர்ச்சிக்கு ஆதாரமான உலக சமாதான நிலைமையை நிறுவுதற்காக இப்போது நடத்தப்படும் இந்த மகாயுத்தத்தில் காயமுற்றோரைப் பேணுதற்காக அமைந்துள்ள ஒரு யுத்த தரும நிதிக்கு ஒருநூறு ரூபா நன்கொடை வழங்கி உதவி செய்யக் கலையாக்கங்கருதி உழைக்கும் இச்சங்கம் தீர்மானித்திருக்கிறது.

இச்சங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவராக இருந்து துணைபுரிபவரும், வித்தியாபிமானியும், கண்ணிய சீலருமாகிய ஸ்ரீமாந். முதலியார் சி. கந்தையா அவர்களுக்கு அரசினர் "முதலியார்" என்னும் கண்ணியப்பட்டம் அளித்து அவர்பால் தமக்குள்ள பெரும் நன்மதிப்பை வெளிப்படுத்தியதை இச்சங்கம் பாராட்டி, அதனால் இச்சங்கம் அடைந்துள்ள கௌரவத்தை மகிழ்ந்து கொண்டாடுவதாயிற்று.

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

அசல்

27.2.1942. தி. சதாசிவ ஐயர்.

அசல் – 1 நகல் – இல்லை.

Contents in Tamil

த.க. A.

copied

5. — PM
27FEB42

CEYLON
10c

Sri: Mahamahopadhyaya
Dakshinatya Kalanidhi
Dr. U. V. Saminatha Aiyer, Avl
Thyagaraja Vilas
Triplicane
Madras.

27-2-42

J. T. SADASIVAIYER,
DISTRICT INSPR. OF SCHOOLS.

அசல்

27.2.1942. தி. சதாசிவ ஐயர்.

அசல் — 1 நகல் — இல்லை.

